2009 ஜூலை 8]

விற்பதற்கு, குளிர்சாதன வசதியுடன் கூடிய ஒரு மெகா உழவர் சந்தை அமைத்துத் தருவீர்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள், மலருக்காக அங்கே வணிக வளாகம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்கிதான், அதை அமைத்திருக்கின்றோம். புதிதாகக் காய்கறி மார்க்கெட் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். அதைப்பற்றி, வேளாண்மை விற்பனைத் துறை ஆணையரிடத்திலே தகவல் தெரிவித்திருக்கின்றேன். அங்கே விற்பனை செய்வதற்கு எந்த அளவிற்குக் காய்கறிகள் வரும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்து, தேவையானால் அங்கே உழவர் சந்தையைப்போல, ஒரு மார்க்கெட்டை ஏற்படுத்தித் தர முயற்சி எடுக்கப்படும். அதேநேரத்தில், அப்படிக் கொண்டுவரக்கூடிய காய்கறிகள் விற்பனையாகாமல் எவ்வளவு நிலுவையில் நிற்கும் என்ற அந்தக் கணக்கும் எடுக்கப்பட்டு, அப்படியிருக்குமானால், அதற்குத் தேவையான குளிர்பதனக் கிடங்கு ஒன்றும், இப்பொழுது எப்படி உழவர் சந்தைகளில் அமைத்துக் கொடுத்திருக்கிறோமோ, அதேபோல அமைத்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

92—

குளிர்சாதனப் பேருந்துகள்

***64279—திரு. எல். ரவிச்சந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் குளிர்சாதன நகரப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2009 ஜூலை 8

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்மூலமாக சேலம் மாநகரில் குளிர்சாதன நகரப் பேருந்துகளை இயக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழில் மற்றும் வர்த்தக ரீதியாக வளர்ந்துவரும் மாநகரங்களில் சேலம் மாநகர் மிக முக்கியமானதாகும். இங்குப் பெருமளவில் பொதுமக்கள் பயணத்திற்கு, நகரப் பேருந்துகளையே நம்பியிருக்கிறார்கள். குறிப்பாக, ஓமலூர், தாரமங்கலம், ஆட்டையாம்பட்டி, வாழப்பாடி, ராசிபுரம், எளம்பிள்ளை போன்ற பகுதிகளிலிருந்து, தினந்தோறும் சேலம் மாநகருக்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள், வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் ஜவுளி உற்பத்தியாளர்கள், தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை மற்றும் விளைபொருட்களை விற்பனை செய்ய, சேலம் மாநகரத்திற்குத்தான் வந்து செல்கிறார்கள். அதேபோல், எனது சேலம்–1–வது தொகுதிக்கு உட்பட்ட அம்மாபேட்டை, கொண்டலாம்பட்டி போன்ற பகுதிகளில் ஜவுளி உற்பத்தி மற்றும் விற்பனை செய்பவர்கள் அதிக அளவில் உள்ளதால், வெளி மாநிலத்தவர்கள், வியாபார ரீதியாக அதிக அளவில் சேலம் மாநகருக்கு வந்து செல்கிறார்கள். தற்சமயம், மாநகரத்தில் இயங்குகின்ற நகரப் பேருந்துகள், அதிக அளவில் பழுதடைந்த நிலையில் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரவிச்சந்திரன், கேள்வியை மட்டும் கேளுங்கள். 10 கேள்விகளைப் போட்டால், 7 கேள்விகளைத்தான் முடிக்க முடிகிறது.

முற்பகல் 9–40

திரு. எல். ரவிச்சந்திரன்: எனவே, சென்னை மாநகரைப் போன்று வளர்ந்துவரும் சேலம் மாநகருக்கும், பொதுமக்களின் வசதிக்காக, முக்கிய வழித் தடங்களில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட நகரப் பேருந்துகள், இந்த அரசினால் இயக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2009 ஜூலை 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சேலம் மாநகருக்கு எந்தெந்தப் பகுதிகளிலிருந்து பேருந்துகள் வருகின்றன என்பதை இங்கே சொன்னார்கள். சேலம் மண்டலத்தில், அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் 490 நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சேலம் மாநகரில் மட்டும் 220 நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, தேவையான அளவிற்கு நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதிலே Vestibule buses—தொடர் பேருந்து ஒன்றுகூட இயக்கப்படுகிறது. நீங்கள் ஏ.சி. பேருந்துகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். ஏ.சி. பேருந்து விடுவதொன்றும் பெரிய காரியம் அல்ல; உடனடியாக விடப்படும். ஆனால், கலர், கலராகப் பேருந்துகள் விட்டு, காசை ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் மறுபடியும் சொல்வீர்கள். ஏ.சி. பேருந்துக்கு கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டருக்கு 85 காசு என்ற வகையிலே வசூல் செய்ய வேண்டியிருக்கிறது. அது பரவாயில்லையென்று சொன்னால், நாங்கள் உங்களுக்குப் பேருந்து விடுவதற்குத் தயாராக இருக்கிறோம். பேருந்து யார் கேட்டாலும், எப்பொழுது கேட்டாலும் விடப்படும். கைவசம் பேருந்துகள் இருக்கின்றன.

மேலும், நீங்கள் கேட்கின்றபோது, சேலம் நகரிலே பழைய பேருந்துகளாக இருக்கிறதென்று சொன்னீர்கள். ஏழு போக்குவரத்துக் கழகங்களிலும், மிகக் குறைந்த வயதுள்ள பேருந்துகள் சேலத்தில்தான் இயக்கப்படுகின்றன. 4.25 சதவிகிதம் என்று கருதுகிறேன். சேலத்தில்தான் புதிய பேருந்துகள் அனைத்தும் இயக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கு முன்பாகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், “ஏன் இல்லை என்கிறாய்? உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்று சொல்” என்று மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, உங்களுடைய கோரிக்கையைப்போல, மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்களும், அங்கே ஏ.சி. பேருந்து இயக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, வெகு விரைவிலே புதிய ஏ.சி. பேருந்துகள் சேலம் மாநகரில் இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது சேலம் மாநகரில் சுமார் ஏழரை இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். மேலும், சேலம் மாநகரைச் சுற்றி, அரசு மருத்துவக் கல்லூரி, அரசுப் பொறியியல் கல்லூரி, அரசு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பஸ் விடுகிறேன் என்று சொல்லிவிட்டாரல்லவா? திரும்பவும் எதற்குச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன் அவர்கள். (குறுக்கீடு) என்ன? திரும்பவும் 7,000 மக்கள் இருக்கிறார்கள், 2,000 மக்கள் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்? திரு. பாண்டுரங்கன், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) Related matter தான் கேட்க வேண்டும். Different matter கேட்கக்கூடாது.

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைக்கு வித்திட்ட வேலூர் கோட்டை, உலகப் பிரசித்தி பெற்ற வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை, வான்புகழ் கொண்ட திருவள்ளுவர் பல்கலைக்கழகம், கல்வியில் புரட்சி செய்யும் வி.ஐ.டி. பல்கலைக்கழகம், ஆன்மீகத்தில் அருள்புரியும் பொற்கோயில் ஆகிய சிறப்புகளைக் கொண்ட வேலூர் மாநகரில் காட்பாடி முதல் அடுக்கம்பாறை வரை குளிர்சாதனப் பேருந்துகள் இயக்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதிகமான அளவிற்குக் குளிர்சாதனப் பேருந்துகள்தான் வாங்கப்படுகின்றன. சென்னை மாநகரிலே இயக்குவதற்காகத் தாழ்தள சொகுசுப் பேருந்துகளெல்லாம் வாங்கப்பட்டிருக்கின்றன. எனவே, எந்தப் பகுதியில் தேவையென்றாலும், குளிர்சாதனப் பேருந்து இயக்கப்படும். வேலூருக்குத் தேவையென்றாலும், அது தரப்படும். ஏனென்றால், 1,000 பேருந்துகளையும் சென்னை மாநகரில் இயக்குவதற்கு இடம் இருக்காது. மதுரை, கோவை, திருச்சி, வேலூர் போன்ற மாவட்டங்களுக்கு அவற்றை அனுப்ப வேண்டும். எனவே, வேலூர் பகுதிக்கும் குளிர்சாதனப் பேருந்து தரப்படும்.

2009 ஜூலை 8]

இன்னொன்று, விழுப்புரம் கார்ப்பரேஷன் என்பது, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களையும்விட ஓரளவுக்கு இலாபம் ஈட்டுகின்ற போக்குவரத்துக் கழகம். அங்கு இருக்கின்ற பேருந்துகளெல்லாம் புதிதாக இருக்கின்றன. இந்த ஆண்டு முழுமையாக காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களுக்குக் கிட்டத்தட்ட 400 புதிய பேருந்துகள் வழங்கவிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக இயக்கப்படுகின்ற பேருந்துகளிலே, இருக்கை வசதிகள் சிரமமாக இருக்கிறதென்ற கோரிக்கையை இங்கே வைத்தேன். உடனடியாக அந்த இருக்கைகள் நீக்கப்பட்டு, இப்பொழுது சௌகரியமாக நாங்கள் வந்துகொண்டிருக்கிறோம். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கேட்பவர்களுக்கெல்லாம் பேருந்துகள் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். மகிழ்ச்சியாக இருக்கிறது. தொடர் பேருந்து இயக்கப்படுவதாலே மிகப் பெரிய அளவு பயணிகளுக்கு வசதியாக இருக்கிறது. மன்னார்குடியிலேயிருந்து திருவாரூருக்கு ஒரு பேருந்துதான் இயக்கப்படுகிறது. அதைத் தாங்கள் உடனடியாக வழங்கினீர்கள். அதைப்போலவே, மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டிக்கும், மன்னார்குடியிலிருந்து தஞ்சாவூருக்கும் தொடர் பேருந்து வேண்டுமென்ற கோரிக்கை வலுவாக வந்துகொண்டிருக்கிறது. அதை நிறைவேற்றித் தர அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடியிலிருந்து தொடர் பேருந்து இயக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திருச்சியிலே ஓடிக்கொண்டிருந்த தொடர் பேருந்தை மாற்றி மன்னார்குடிக்கு விடப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு அந்தத் தொடர் பேருந்து

கொள்முதல் செய்யவில்லை. தொடர்ந்து அது தேவைப்படாது என்பதைக் கருத்திலே கொண்டு அதை வாங்காமல் நிறுத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், பல சட்டமன்ற உறுப்பினர்களும், தொடர் பேருந்துகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். புதிய பேருந்துகளை விரைவில் வாங்கி, உங்களுடைய பகுதிக்கு வருவதற்கு எப்படியும் மூன்று, நான்கு மாதங்கள் ஆகும். எனவே, அதுகுறித்துப் பரிசீலித்து, நிச்சயமாக அந்தத் தொடர் பேருந்துகள் விடுவதற்கான முயற்சி எடுக்கப்படும்.

முற்பகல் *9–45*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

93—

எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பிரிவு

***11239—திரு. கோ. ஐயப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பிரிவு அமைத்துத் தர, அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. 500 படுக்கைகள் கொண்ட ஈரோடு மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு மட்டும் தற்போது எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடலூர் அரசுத் தலைமை மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. ஐயப்பன்.

திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் அரசுத் தலைமை மருத்துவமனையினைப் பொறுத்தவரையில்